LB
~~1195~~
114363

ஓம்.

மெய்ஞ்ஞான ஸ்வரூபாயநம:

MAY "RISHIS" (MAHATMAS) BLESS
OUR MOST GRACIOUS SOVEREIGN
QUEEN VICTORIA THE EMPRESS OF INDIA.

# THE VICTORIA JUBILEE HINDU MEDICINES.

## விக்டோரியா ஜுபிலி இந்து ஔஷதங்கள்.

*Prepared according to Ayurvedic principles.*

TRADE



MARK.

**TO BE HAD AT**

THE VICTORIA JUBILEE SIDDHOWSHADA SALA,
*359, Mint Street, MADRAS.*

ESTABLISHED IN 1887.

விக்டோரியா ஜுபிலி சித்தௌஷதசாலை,
359, தங்கசாலைத்தெரு, சென்னை.

PRINTED AT THE "MADRAS RIPON PRESS",—MADRAS

*Revised and Enlarged.*

*Registered Copy-Right.*

1895.

L.B.
8185



1937
615.017

ஓம்.

ஸ்ரீ அகஸ்தியபகவானேநமஹ

# May Rishis (Mahatmas) Bless
# Our Most Gracious Sovereign Queen Victoria
# The Empress of India.

இதனால் தெரிவிப்பதாவது: இந்தப் பரதகண்டத்தின் இந்து ஜெனன பூமியாகிய வேதாந்தசுகத்தைத் தேர்ந்த குலசேகர ஆழ்வாரின் ஆட்சிக்குரிய திருவாங்கூர் சமஸ்தானத்தில், பரிதுள்ள சகல உயிர்களும் உஜ்ஜீவித்திருமாறு பரமகருணையுடன், ஸ்ரீயப்பதியாகிய னம்பெருமாள் எழுந்தருளி அனந்தசயனமாய், பக்தர்களுக்குத் திவ்யதரிசனை சாதித்திருக்கின்ற திருவனந்தபுரமாகிய வழியில் கட்டிடம், யான் என உள்ளத்தில் பதிதயாவனத்தைத் தேசி, சகல இந்திரியானித்து, இவர் பக்தராகி, இந்திரியாட்டு தர்மமே ஓர் திரு உருவாய் அவதரித்த எங்கள் குலசேகர மன்னரும், தர்மவழி பிறழாது கருணையாகி பொறுப்பும் அவ

ரது இராச பாரம்பரையும், சதா மும்மாரி பொழியுமாறு வேதவிதி நெறியில் நின்று புராதன ஆரியதர்மம் செழித்து ஓங்கச் செங்கோலோச்சி, அரண்மனை குடும்பத்தவர்களும், பிரஜைகளும மனோரம்யமாய் நித்திய பிரம்மானந்த சுகானுபவமுடையவர்களாய், பெரியோர்களுடைய வேதகோஷ்டியினாலும், வேள்வியினாலும் என்றும் திருவனந்தசயனம் சம்பூரணம்பெற்று விளங்குமாறு, பரமபதியை என் திரிகரணங்களாலும கருணைபுரியும்படி வேண்டி, பின் என் சகோதரர்களாகிய கனவான்களுக்குத் தெரிவிப்பதாவது,—

சகோதரர்களே! இப்பேர் உலகின்கண்ணுள்ள சரம் அசரமென்று சொல்லும்படியான உயிருள்ளனவும உயிரில்லனவுமாகிய இருதிறவகையி லொன்றினைச்சேர்ந்தனவாகிக் கட்புலனால் காணக்கூடியனவும், காணக்கூடாமல் அதி சூக்ஷமமாயுமிருக்கும் சர்வ வஸ்துக்களும் உற்பத்தியாவதற்கும் அவை போஷிக்கப்படுவதற்கும், இவையே கடைசியில் அழிந்து நாமரூபங்களில்லாமல் மறைவதற்கும் ஆதிகாரணபூதனாய், கருணாநிதியாய், சுயம்பிரகாசனாய்ப் பக்தபரிபாலன துஷ்டநிக்கிரகனாய், நிதயாளுவாய், அவாங்மனோகோசரனாய், திரிகாலத்திலும் உள்ளவனாய், ஞானமேவடிவினனாய், ஆநந்தமே ஸ்வரூபனாய் விளங்கி, ஆன்மகோடிகளை அருள்புரிந்து ஆண்டு ஆட்கொள்ளும் நித்திய நிர்மலவஸ்துவாகிய பரிபூர்ணர் மக்கள் விதிவிலக்குகள் அறிந்து தம்மைச்சதா பஜித்துச் சுகஜீவர்களாய் வாழவேண்டி, ஆயுள்வேதத்தையும சிருஷ்டித்தருளினர்.

ஆயுள் வேதமென்பது ஆயுள்விஷயமாகக் கூறும்படியான அறிவு அல்லது ஞானமயமான விதிவிலக்குகளடங்கிய சுருதியாம். ஆன்மாவிற்கு ரட்சையாக ஏற்பட்டுள்ளது இச்சரீரம். மேற்படிஆன்மா புரிந்த நற்கன்மம், தீக்கன்மங்களுக் கேற்பச், சுகத்தையோ அல்லது துக்கத்தையோ சரீரவழியாகவே பெற்று அநுபவிக்கும். மே



லும் இவ்வான்மா செய்யும் கன்மங்களுக் கேற்பக் காலநிர்ணயங்களையுடைய பலசரீரங்களையும அடையும். ஆதலால் சடமான சரீரத்தின் மூலமாக அநுபவிக்கின்றவனாகிய சித்தாகிய ஆன்மா, ஓர் சரீரத்தில் பிரவேசித்தது முதல் அச்சரீரத்தை விட்டுநீங்கும் காலஅளவிலெவ்வளவுண்டோ, அதையே ஆயுளென்று சொல்லுவது. ஓர் சரீரம் ஒழிந்தவுடன் பிறிதொருசரீரத்தை அவாவி அநுபவிக்கும் இயற்கைக் குணமுடையவனாகிய ஆன்மாவின் இயல்பு, இந்த ஆன்மா ஒரு சரீரத்தின்வழியாக அநுபவிக்கும் ஆயுளின் காலவித்தியாசங்கள், சரீரத்தில் தோன்றி மனதைப் பேதப்படுத்தும தேகவியாதிமுதலிய துக்கங்கள், இவைகளுக்கு முதற்காரணம், பின் அநுபவிக்கவேண்டியிருக்கிற (சுக) துக்கங்கள், இவை முதலியவைகளைப்பற்றிக்கூறி, அவரவர் தாரதமியங்களுக் கேற்பச் சரீரம் மனம் இவைகளுக்கு வந்த வியாதிகளையும துக்கங்களையும்போக்கும் சிகிச்சைகளையும், மேலும்மேலும் துக்கஸ்திதமான சரீரம் வாராதபடி காக்கும் வழிகளையும், இந்த ஆன்மா அடிக்கடிப் பலசரீரங்களில் புகுவதாலும விட்டு நீங்குவதாலு முண்டாகும் மரண ஜநந துக்கங்களை நீக்கி வெகுகாலம ஒரே சரீரத்திலிருக்கும் வழிகளையும், இவற்றிற்கு முக்கியசாதன விரோதமாகிய பிணி, மூப்பு, சாக்காடு இவைகளினின்றும் பாதுகாத்துக்கொள்ளும வழிகளையும்பற்றிக் கூறுகின்றதினால், ஆயுளைப்பற்றிய ஞானத்தைக் கூறும்வேதம் ஆயுள் வேதமென்று பெயர்பெற்றது.

ஆயுள் வேதத்தில் வைத்தியம் முக்கியாங்கமாகையால் இவ்வாயுள் வேதமே வைத்திய சாஸ்திரமென்று வழக்கத்தினால் சிலர் கூறுவர். சரீரத்தின் குணகுண தத்துவங்களை மாத்திரம் அறிந்து வைத்தியமாகிய சிகிச்சை செய்வதுடன், இச்சரீரத்துடன்கூடி உறவுபெற்றுப் பிரிவினையற்றுநிற்கின்ற மனம் ஆன்மா இவைகளின் சம்பந்தாசம்பந்த குணகுண தத்துவங்களையும் நன்கு அறிந்து சிகிச்சைசெய்யாத வைத்தியர்களாகிய பண்டி

தர்கள், மக்களுக்குப் பூரணமான இத்தகை ஆத்திய வசியமாய் கொடுக்கவேண்டிய காலங்களில் கொடுத் துதவுவார்கள்.

இவ்வாயுள் வேதமானது சரீரம், மனம், ஆன்மா, பரமான்மா (கடவுள்) ஆகிய இவைகளின் இலட்சணங்களையும், இவைகளோடுடன் சம்பந்தப்பட்டிருக்கும் பிரிவினையற்ற உறவினையும் விளக்கும், சரீரம் சுத்திபெற்றால் மனம் சுத்தி பெறுமென்றும், மனம் சுத்திபெற்றால் ஆன்மா சுத்திபெறுமென்றும், ஆன்மா சுத்தி அடைந்தால் பரமாத்மாவின் யதார்த்தசொரூபம் உண்டாகுமென்றும், இவையே முத்திக்குச் சாதகமாகவிருக்குமென்றும் கூறுவதுமன்றி, மேற்சொல்லிய பிரகாரம் சரீரம், மனம், ஆன்மாக்களை சுத்திகரிக்க ஆயுள்வேதத்தில் காயசித்தி-வாதசித்தி-யோகசித்தி-ஞானசித்தி முதலிய சித்திகளும், பல அரிய ஔஷதங்களும், மேற்படி சித்திகளை உண்டாக்கும்படி ஜபிக்கும் உத்தம அட்சரங்களும் (பீஜங்களும்), தியானங்களும், பரமான்மாவின் பக்தியில் சொக்கும்படிச்செய்து அவருடைய யதார்த்த லட்சணங்களை விளங்க வைக்கும் யோகசாதனத்தைத், ஆரம்பத்தில் தேகசுபாவத்தினாலும் அசக்தியினாலும் பங்கமடையாமல் நடத்தவேண்டியதற்கு அவசியமான பல சிறந்த ஔஷதங்களும் கூறப்படும்.

இப்பூவுலகின்கண்ணுள்ள பலகண்டங்களிலும் ஆதிகாலந்தொடங்கி இதுகாறும் கலியிலும், பகவத்பக்தி, மாதா, பிதா, ஆசாரிய, இராஜ பக்திகளிலும், பெரியோர்களுக்கு மனப் பூர்வகமாக உள்ளன்புடன் செய்யும் (16) பதினாறுவித உபசாரங்களிலும், சற்பாத்திரங்களுக்குக் குறைவறச் செய்யப்படுமென்று கூறிய ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்கு உணவு, ஐயமிடல், தின் பண்டம் நல்கல், அறவைச்சோறு, நோய்க்கு மருந்து, கண்மருந்து, விலங்கிற்கு உணவு ஈதல், அறவைப் பிணஞ்சுடுதல், பிறர் துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தல்,



சோலை அமைத்தல், மடம் தடம் கட்டல், விலைகொடுத் துயிர்காத்தல் முதலிய (32) முப்பத்திரண்டு அறங்களை மனச்சோர்வின்றிப் புரிவதிலும், அன்னதானம், வஸ்திரதானம், சுவர்ணதானம், பொன், வெள்ளி, செம்பு இவைகளினால் செய்த பாத்திரதானம், அஸ்வதானம், கஜதானம், வாகனதானம், பூதானம், கோதானம், திருமண கன்னிகாதானம், கிரகதானம், சயனதானம், சத்ர (குடை) சாமரதானம், பாதரட்சைதானம் இத்தியாதி (16) சோடச மஹாதானங்களையும் மனதில் சலிப்பேயின்றிச் சதாகாலமும் குறைவற வழங்குவதிலும் சிறப்புற்றோங்கி, சகல வளங்களும் நிறைந்துள்ள இப்பாரத கண்டத்தில், புண்ணியமே திரண்டுவந்து ஓர் திருவுருவெடுத்தவாறு, முற்று முணர்ந்து ஞானமே வடிவாக நின்று அவ்வக்காலத்துத் திரு அவதாரஞ்செய்த பல பெரியோர்கள், சர்வ வல்லவரால் அளிக்கப்பட்ட ஆயுள்வேதத்தை ஆராய்ந்து அநுபவித்து, உண்மைகளை உள்ளது உள்ளபடி அறிந்து தெளிந்து, அவ்வழியில் நின்றனர்.

ஜீவகாருண்யம் மேற்கொண்ட இம்முதல்வர்கள், இவ்வாயுள் வேதத்தின் விதி விலக்குகளை நன்கு உணர்ந்து, அவ்வழி ஒழுக சக்தியற்ற ஜனங்கள் பிணி மூப்புச்சாக்காடு முதலிய துன்பங்களின்றி இன்பமாய் ஜீவிக்கவேண்டி, அறிவதற்கு மிகு அருமையாயிருந்த இவ்வாயுள் வேதத்தை வடமொழியினிலும் பல அரிய நூல்களாக வகுத்துப் பல பாஷைகளிலும் விரித்துத் திருவாய்மலர்ந்தருளினர்.

இவ்விதம் மக்களுக்குப் பல அரிய நூல்களைப் பரோபகாரமாய் வகுத்து அருளினவர்களும், மஹாசம்பத்தான பல சித்திகளினும் வல்லமைபெற்றுச் சித்தர்களென்று காரணப்பெயர் பூண்டவர்களுமாகிய மஹா முனிவர்களான ரிஷிகள், சரீர சுத்தியினால் மனச்சுத்தியையும், மனச் சுத்தியினால் ஆன்மசுத்தியையும், பெறும்

வழியை அநுபோகமாய்க் கண்டு, இவ்வித சுத்தியைப்
பெற்ற சோமாகிய கதியற்ற ஜீவர்களும் முத்தர்களாகும்
படி அதற்குத் தக்க ஆகாராதி ஔஷதங்களை ஆசார
அநுஷ்டானங்களாகவும், கிரியைகள் மூலமாகவும் ஏற்படு
த்தி, தேகக்கம் பங்கப்பட்ட காலத்திலும் தேகக்கம்
ஆரோக்கிய நிலையிலிருக்கும் காலத்திலும், உபயோகப்
படுத்தும்படிச்செய்து, அநுஷ்டானத்திற்குக் கொண்டு
வந்தார்கள். வியாதி முதலியவைகளால் உண்டாகும்
தேக வாதனையை ஔஷத முதலிய சிகிச்சைகளால்
நீக்க முயலுகையில், இச் சிகிச்சைகளால் மனதிற்கும்
ஆன்மாவிற்கும் அபிவிருத்திக் குறைவு உண்டாகாமல்
முக்கியமாக நமது முன்னோர்கள் கவனித்துவந்தார்கள்.

ஆயுள் வேதத்திலும் பின் முதறிஞர்களால் வகு
த்த பல பாஷைகளிலும் திருவாய்மலர்ந்தருளின நூல்
களிலும் கூறப்படும் சரீர சம்பந்த சிகிச்சைகளெல்லாம்
மன ஆன்மாபிவிருத்தியைச் செய்யும் பரம ஔஷதங்
களே. ஏனெனில் நமது பெரியோர்கள் முத்தியைவிட
வேறு எதையும் ஒரு பொருளாக கருத்தில் கொண்டா
ர்களில்லை யாதலாலேயாம். மனோதத்துவத்திற்கும், ஆ
ன்ம இலட்சணத்திற்கும், இவைகள் சடமாகிய தேகத்
திற்குச் சம்பந்தப்பட்டிருக்கும் கூட்டுறவினுக்கும் தக்க
படி ஆகாராதி ஔஷதங்களைப் பரம்பரையாக உட்கொ
ண்டுவந்தால், மன ஆன்மாபிவிருத்தி குன்றமடையாது.
ஆசாரபுருஷர்கள் மனம் சுத்திபெறப் பிராயச்சித்தங்
களையுஞ் செய்ய நேரிடாது.

மேற்சொன்ன விஷயங்களுக்கு அநுகுணமாக நமது
பெரியோர்களின் முறைப்படி, எனது ஆசாரியர் மூல
மாக யான்பெற்ற வைத்திய முறைகளையும், இன்னும்
சில ஆயுள்வேத பண்டிதர்கள் வெகுகாலமாய்க் கையா
ண்டுவந்த சில ஔஷதங்களையும், பலருக்கும் எளிதில்
கிடைத்து உபயோகப் படும்படியான ஒரு ஔஷத சா
லையை ஏற்படுத்த வேண்டுமென்றும் அவர், வெகுநாள்



என்மனதில் குடிகொண்டு வருத்திவந்தது. பல இடை
யூறுகளினால் எனது முயற்சி குன்றிவந்தது. பின் என்
சிநேகிதர்களில் சிலரால் இந் நன்முயற்சி தூண்டப்பெ
ற்றுத் திடங்கொண்டு, நமது பெரியோர்களாகிய சித்தர்
கள் முறைப்படிச் செய்யப்பட்டுவரும் ஔஷதங்களி
னது சாலை யாகையால் "சித்தௌஷதசாலை" என்றும்
திருநாமம் சூட்டப்படவேண்டிய சுபதினத்தையும் க்ஷே
மகரமான காலத்தையும் எதிர்பார்த்திருந்தோம். மே
லும் நமது பெரியோர்களாகிய மஹா ரிஷிகள் காய
சித்தி பெற்றுச் சிரஞ்சீவிகளா யிருக்கிறார்களென்றும்,
நமது மாட்சிமைதங்கிய விக்டோரியா சக்ரவர்த்தினி
அம்மாளை ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் முகப்பெய
ரிட்டு, இராஜ விசுவாசமாய் ஒரு சிறு புத்தகம் மேற்படி
நமது சீமாட்டியின் 1837ளு நடந்த ஜூபிலி மஹோற்
சவத்தினன்று சென்னை இராஜதானியின் இக்கால அர
சிரா யிருந்த கவர்னர் லார்டு கன்னிமாரா (His Excel-
lency the Honorable Lord Connemara, The
Governor of Madras) பிரபுவின் மூலமாக அனுப்பப்ப
ட்டு, நமது இராஜவிசுவாச பத்திரங்களோடுடன் ஏற்
றுக்கொள்ளப்பட்ட தென்றும் உத்திரவளித்தனர். நமது
சக்ரவர்த்தினி விக்டோரியா அம்மையாரின் திருநாமமும்,
இவர் (50) ஐம்பது ஆண்டு கல்லரசு புரிந்தபின் கொண்
டாடிய மஹோற்சவமும், இவரது நடுநிலைமையையுடை
ய செங்கோல் நீதியின், எக்காலத்தும் எக்கண்டத்தவர்
களின் மனதிலும், முக்கியமாகப் பரதகண்டத் தவர்க
ளின் மனதிலும், நீங்காமல் குடிகொண்டிருக்கும் சுப
தினமாயும், க்ஷேமகரமான காலமாயு மிருந்த ஜூபிலி
மஹோற்சவ தினத்தினன்று "விக்டோரிய ஜூபிலி
சித்தௌஷதசாலை" என்றும், இச்சாலையில் தயார் செய்
யப்படும் ஔஷதங்களுக்கு "விக்டோரிய ஜூபிலி சித்
தௌஷதங்கள்" என்றும திருநாமங்கள் சூட்டப்பட்டு, நாள்
னுமுதல் வளர்பிறையில் வந்து பலதேசங்களிலுமுள்ள நம
து சகோதரர்களுக்கும், அதிகப் பிரயோஜனத்தை அளி

த்து வருகின்றது. மேலும் இவ்விதமாக ஏற்படுத்தப்பட்ட ஔஷதங்களை உட்கொண்ட மக்கள் தேக திடனும், சுக ஆரோக்கியமும், நற்குணமைப்பட்ட கல்விவைமையையுடைய மனமும், ஞான விசாரத்திற்கு அத்தியாவசியகமான அறிவும், பகவத் பாகவத அன்பும், தேசாபிமானமும், இராஜ விசுவாசமும், மஹான்களின் கிருபையால் பெற்று வாழ்ந்து, பாக்கியமடைந்து தேசத்தைச் சமாதானப்படுத்திப் பிரஜைகளைத் தன்மக்களைப்போல அன்புடன் செங்கோல் ஓச்சி ஆண்டுவரும் மகா மேன்மையும் கனமும் மாட்சிமையும்பொருந்திய, மஹாராணி இந்தியா சக்கிரவர்த்தினி விக்டோரியா அம்மன் புத்திர பௌத்திராதிவர்க்க பரம்பரையாக இந்து கண்டத்தைப் பிரஜாநுகூலமாய்ப் பாலனஞ்செய்ய, மஹான்கள் கிருபைசெய்து சகல வல்லமைகளையும் அருள்புரிய பிரார்த்தித்து வருவோமாகவும்.

இங்ஙனம்,

திருவாங்கோடு (Travancore) சமஸ்தானத்தின்
முக்கிய நகரமாகிய திருவனந்தபுரத்தில்
(Trevandrum) அரண்மனையில் இராஜ வைத்திய
ராயிருந்த (1st Class Apothecary)
மஹாஸ்ரீ, க. ஆரங்கராயலு நாயுடு அவர்கள் புத்திரன்,
ந. ர. சுப்பராயலு நாயுடு,
சென்னை.

N. R. SOOBBARAYALOO NAIDOO
*Ayurvedic Physician.*
MADRAS.

# The Victoria Jubilee Hindu Medicines.

விக்டோரியா ஜூபிலி இந்து ஔஷதங்கள்.

*Prepared according to Ayurvedic Principles.*

**(TO BE HAD AT)**

THE VICTORIA JUBILEE SIDDHOWSHADA SALA,
359, Mint Street, Madras,
*Established in 1887.*

1 Victoria Jubilee Golden Pills / விக்டோரிய ஜுபிலி சுவர்ண குளிகைகள். — சீசா ரூபா 2.
2 இரத்த சஞ்சீவனி புட்டி ரூ 1.
3 தேகபுஷ்டி லேகிய டப்பி ரூ 1.
4 கூந்தல் வளர்ப்பான் புட்டி ரூ 1(2 அவுன்சு சீசா 6 அ.)
5 பிரமேகசமஹாரி புட்டி ரூ 1-8-0.
6 இரணபரிகாரி சீசா 11 அணா. சின்னசீசா 6 அணா.
7 கர்ணபிந்து சீசா 6 அணா. பெரியசீசா 12 அணா.
8 நாடிதார்ட்யதயிலம் புட்டி 12 அணா.
9 மேகமர்த்தனிபுட்டி ரூ 1-8-0 (2 அவுன்சு சீசா 8 அ.)
10 குஷ்டகஷ்ட நிவாரணி புட்டி ரூ 1-2-0.
11 சுஆரோக்கியதயிலம் சீசா 12 அணா.
12 சுகசந்த்ராம்ருதக்குளிகைகள் சீசா 1-8-0.
13 மேகஜ்வராம்ருதம் புட்டி 1-8-0.
சிறியபுட்டி 13 அணா.
14 ஜன்னிதாவானலம்புட்டி ரூ 1.(2 அவுன்சு சீசா 6 அ)
15 பாலகரட்சணி சீசா 8 அணா.
16 பித்தஹாரி டப்பி 8 அணா.
17 தந்தசஞ்சீவனி டப்பி 4 அணா. பெரியடப்பி 8 அணா
18 உஷ்ணஹாரிபுட்டி 12 அணா,(2 அவுன்சு சீசா 6 அ.)
19 ஜீர்ணகாரணி டப்பி ரூ 1.
20 பாலசஞ்சீவனி சீசா 8 அணா.
21 வெள்ளைத்தீர்ப்பான் டப்பி 12 அணா.
22 கொருக்கு சுருக்கு நிவர்த்தம் டப்பி ரூ 1.

23 சிசுபோஷணி சீசா 6 அணா. பெரியசீசா 11 அணா.
24 மதனாமிருதம் டப்பி ரூ 1-8-0.
25 தேகபல ஆரோக்கிய காயகல்பபஸ்மம் ரூ 3.
26 வாந்திபேதிசம்ஹாரி சீசா ரூ 1.
27 வெள்ளைநிவர்த்திலேகம் டப்பி ரூ 1-2-0.
28 சுவமூலகுடாரிலேகம் டப்பி ரூ 1-4-0.
29 வாதசண்டமாருதகிருதம் புட்டி 14 அணா.
30 ஞானசாதனமஹாகிருதம் புட்டி 14 அணா.
31 சிலேஷ்மவிஷமசோஷணி டப்பி 10 அணா.
32 மூலகிர்மூலபஸ்மம் ரூ 2.
33 க்ஷயக்ஷயலேகம் டப்பி ரூ 1.
34 வாதவைவாரி டப்பி ரூ 1.
35 புருஷகல மஹாசஞ்சீவிபஸ்மம் ரூ 2.
36 க்ஷயபாவினிகிருதம் புட்டி ரூ 1.
37 மேகபந்தனிசூர்ணம் சீசா ரூ 1.
38 மேகோஷ்ணபஞ்சனகிருதம் சீசா 12 அணா.
39 சுவமூலாக்னிசூர்ணம் டப்பி ரூ 1.
40 மலகிர்மலி டப்பி ரூ 1.
41 திரிதோஷப்பிரகோப ஸமனபேதிஎண்ணெய். 2 அவுன்ஸ சீசா ரூ 1. (1 அவுன்ஸ சீசா 8 அணா.)
42 ஸர்வமேகசண்டமாருதலேகம் டப்பி ரூ 2. சிறிய டப்பி ரூ 1-4-0
43 தேகபோஷண இரக்தவிபூர்த்தினிலேகம் டப்பி 1-12-0.
44 ஸ்வாசகாசநிக்ரகம் சிறியடப்பி 6 அணா. பெரிய டப்பி 12 அணா.
45 காடிசாருஷ்ய மதனானந்தலேகம் ரூ 1-12-0.
46 சர்வப் பிரமேக சர்வ விஷோஷணக் சூரணம் டப்பி ரூபா 2. சிறியடப்பி 1-4-0.
47 இரக்த வாலர்த்தனி லேகம் டப்பி ரூ 1-4-0.
48 விருத்த யௌவனப்பிராப்தி லேகம் டப்பி ரூ 1-4-0.
49 திரிதோஷஹர காயகல்பசூரணம்டப்பி ரூ 1-4-0.
50 ஜீர்ணவிசதுஷ்டமேகஹரதாமபூலகுளிகைகள்சீசாரூ 1.

ஓம்.
தேவிஸஹாயம்.
மருந்துகளின்ஸ்வரூபங்கள்.

---

1. Victoria Jubilee Golden Pills—விக்டோரியா ஜூபிலி சுவர்ண குளிகைகள். இவை சுவர்ணம் சேர்ந்து செய்யப்பட்ட ஔஷதம். இக்குளிகைகளால் தினமுவர ஜீவனம், தேகதாருட்யம், சுக்கிலத்தம்பனம், தாதுபுஷ்டி, புருஷத்துவம், ஞாபகசக்தி, மனோற்சாகம் முதலியன உண்டாகும். இரத்தக்குறைவு மாறும். வாய் நாற்றம், ஜலதோஷம், கபம், மனக்கலக்கம் முதலியன நீங்கும். இருதயத்திற்கும், மூளைக்கும் பலமுண்டாகும். விலை சீசா 1-க்கு ரூபா 2.

2. இரத்தசஞ்சீவனி—இந்த சர்பத்தில் கொஞ்சமெடுத்து அதில் உருசிக்கு யேற்றவாறு தண்ணீர் விட்டுக் கலந்து சாப்பிட்டுவர இரத்தம் சுத்தியாகும். மூளை, இருதயகமலம், குண்டிக்காய், ஈரல் முதலிய இராஜ உறுப்புகளுக்கு வலிமை பெருகும். சொரி, சிரங்கு, தினவு தீரும். கிரந்தி, வெண்குஷ்டம், கருங்குஷ்டம் சாந்தி பெறும். ஐம்புலன்களின் உணர்ச்சி கூர்மைபெறும். தேகத்தில் வெப்பமும் குளிர்ச்சியும் சமர்சமாயிருக்கும். அம்மை என்னும் வைசூரிகண்ட குழந்தைகளுக்கு கொடுத்தால் அதன் மும்முரம் அடங்கிப்போம். அம்மைகாணாத குழந்தைகளுக்கு கொடுத்தால் வெகுவாய் அது வாராமாட்டாது. அம்மை காலங்களில் இதை வாங்கி முன்ஜாக்கிரதையுடன் கையாளுவது மெத்த உத்தமம். சாரீரம் கம்மியகாலத்தில் பாடகர்கள் இதை இரண்டொருநாள் சாப்பிட்டால், கம்மல் முதலிய தோஷங்கள் நீங்கி சுகசாரீரம் பெறுவார்கள். விலைபுட்டி ரூ 1.

3. தேகபுஷ்டி லேகியம்—இந்த லேகியத்தில் வேளைக்கு ஒரு கொச்சைக்காய் அளவு சாப்பிட்டு வந்தால் தேகபுஷ்டி, காந்தி, அழகு, வசீகரம், இந்திரியவிருத்தி, நித்திரை உண்டாகும். மேகவெப்பம் மூலக்கடுப்பு சாந்தமாகும். சீதபேதி இடுப்புவலி நீங்கும்.

விலை டப்பி ரூபா 1.

4. கூந்தல் வளர்ப்பான்—இந்த தயிலத்தை கூந்தலில் பிரதிதினம் தடவிவந்தால், மயிர் உதிர்தல், பிளவுபடுதல், கட்டைப்பாய்தல் முதலியன நீங்கி மயிர் வளரும். இந்தத்தயிலத்தால் தலை முழுகிவந்தால் கண்ணெரிச்சல், அருவுதல், கண்கூச்சம், பார்வைக்குறைவு, மயக்கம், காங்கை, தலைநோதல், காலில் அதிராசியம், நீர்ச்சுருக்கு, உடம்பு எரிச்சல் முதலியன நீங்கும். தேகம் குளிர்ந்து மேனி பெறும்,

புட்டி ரூபா 1. 2-அவுன்ஸ் சீசா 6-அணா.

5. பிரமேகசம்ஹாரி—இந்த மெய்யில் ஒருகரண்டி அளவு உட்கொண்டுவந்தால், அதிக வாதையைக் கொடுப்பதும், காலப்பட்டதுமான பலவித வெள்ளை என்னும் மேக வெட்டைநோய்கள் சௌக்கியமாகும். இந்த மேகத்தினால் தேகம் சோர்ந்து போனவர்களுக்கு அதிக குணத்தைக் கொடுக்கும். நீர்த்தாரையில் சீழ், இரத்தம் வடிதல், புண், புரை, துர்மாமிசங்கள் வளர்தல், நீர்க்கடுப்பு, கிரந்தி, தேகத்திலுண்டாகும் மேகப்புண், செவிநுனிப் புண்கள், அறையிற்புண்கள், மேகவெட்டை, பாண்டு, சோகை, காமாலை, கிரந்தி, மேகம், கணக்காய்ச்சல், எந்திக்கை பிடிக்கும் கொடிய வியாதியாகிய பெரும்பாடுநோய், எலும்புருக்கி நோய் முதலிய மேகசம்பந்தமான நோய்களை நீக்கும். தேகம் காந்தியாயிருக்கும். தேகமெலிவும், காம்புகளை வறுமிக்கும். பலவித முலைவியாதிகளை சாந்திசெய்யும்.

விலை புட்டி ரூபா 1 அணா 8.

6. இரணபரிகாரி—இந்த மருந்தை பூசிவந்தால் தேமல், படைகள், படர்தாமரை முதலிய மற்ற தொத்துவியாதிகளுக்கும், குழந்தைகளுக்கு உண்டாகும் கரப்பான், தக்கி, சொறி பலவித இரணங்களும், பாலிநிரத்து முதலியவைகளும், கைவிரல் காலிரல் சந்துகளில் ஊறும் சிரங்கு, புண் வெடிப்பு முதலியவைகளும் அதிசீக்கிரத்தில் சொஸ்தமாகும்.

சீசா 11 அணா. சிறிய சீசா 6-அணா.



7. கர்ணமிருதம்—இந்ததிராவகத்தில் வேளைக்கு (4) நான்கு அல்லது (5) ஐந்து துளிகள் விகிதம் காதில் விட்டுவந்தால், காதுகுத்தல், காதுரணம், காதுக்கட்டி, காதில்வளரும் துர்மாமிசம், காதில் ஒழுகும் சீழ், இவை முதலிய கர்ணரோகங்கள் யாவும் நீங்கும். சீதளத்தினாலுண்டாகும் காதடைப்பு, கேள்விமந்தம், காதில் ஓசை இவைகள் சிரமமற நீங்கும்.

சிறியசீசா 6 அணா. பெரியசீசா 12 அணா.

8. நாடிகாருண்ய தயிலம்— இந்த தயிலங்காணம், வாதபித்த சிலேஷ்மநாடிகளில் பாய்ந்துள்ள சர்வதோஷங்களைப் பிரித்து, இரக்ஷணஞ்செய்து, அந்நாடிகளை ஆதாரமாக்கொண்ட சரீரத்திற்கும், மனதிற்கும் ஆரோக்கியத்தை ஊட்டும். தலை, கண், காது, மூக்கு முதலியவைகளில் உண்டாகும் எல்லாப்பிணிகளையும் குணப்படுத்தும். காவறட்சி, கபம், இரத்தம்கக்கல், காசம், இருமல், இரைப்புமுதலியவைகளைப்போக்கும். மதுமேகம், நீரிழிவு, மேகநீர்கட்டி, மேகத்தடிப்பு, கண்டமாலை அரையாப்பு, மேகஜ்வரம் முதலிய வியாதியுள்ளவர்கள் தேகத்திற்கு ஒத்த அனுகூலமாயிருக்கும். இளமைப்பருவத்தில் அறியாமையால் தேகத்தை அதிகபோகத்தால் கெடுத்துக் கொண்டவர்களுக்கு இத்தயிலம் மஹோபகாரியாயிருக்கும். தலைவாரிக் கொள்பவர்கள் எண்ணெயைநீக்கி இத்தயிலத்தையே, உபயோகித்தால் மெத்தசௌக்கியம் பெறுவார்கள். புட்டி விலை 12 அணா.

9. மேகமர்த்தனி.

(இந்த எண்ணெயை சாப்பிட்டால் சுமார் இரண்டு அல்லது மூன்றுதடவைகள் மலசுத்தியாகும்.)

இந்த அற்புத எண்ணெயை பிரதி தினம் காலையில் ஒருகரண்டி அளவு சாப்பிட்டுவந்தால், மேகரோகங்களை ஓட்டும். மேக சம்பந்தமான 'வெள்ளை' என்னும் வியாதி

கண்டவர்களுக்குக் கொடுத்தால் நீர் எரிச்சலைப்போக்கி, நீர்த்தாரையிலுண்டாகும் இரணத்தை ஆற்றும். மூலக்கடுப்பு, நீர் எரிச்சல், நீர் கடுப்பு முதலிய வியாதிகளால் வாதைப் படுபவர்கள் இந்தஎண்ணெயை சாப்பிட்டால் அதிக குணத்தை அடைவார்கள். மேகநீர், பரங்கி, சோகை, குடல்வாதம், கிரந்தி, சொறி, சிரங்கு, வாய் நாற்றம், வாய்ப்புண், கபம் முதலியன நிவர்த்தியாகும். வயிற்றிலும் இரத்தத்திலுமுள்ள கிருமிகளை வெளிப்படுத்தும். புட்டி ரூ 1-8-0. 2 அவுன்சு சீசா 8 அணா.

---

10. குஷ்டகஜ்ட நிவாரணி—இந்த நெய்யைச் சிரசிலும் உடம்பிலும் தேய்த்து முழுகிவந்தால், கருமவியாதி யெனப்பட்ட பலவித குஷ்டங்களும், மேகப்படைகள், பலவித மேக இரணங்கள், ஐயாச் சொறி, இளவு சிமிர்வாதம், கிரந்தி, தொடைவாழை, ஜந்துக்களின் பற்கடி விஷம், முதலியவை நிவாரணமாகும்.

புட்டியில் ரூ 1-2-0

---

11. சுகாரோக்கியதயிலம்—இந்ததயிலத்தில்(4) நான்கு அல்லது (5) ஐந்து துளிகளை மேல்பூச்சாகத் தேய்க்கில், தலைவலி, கழுத்திசிவு, மார்புநோய், கைகால் குடைச்சல் முதலிய வாத பித்த சன்னி சம்பந்தமான சுருக்குநோய்கள் உடனே நீங்கிவிடும். கட்டிய இரத்தம் கரையும், வீக்கம்வாங்கும். புண்களிலுள்ள புழுக்கள் மாய்ந்துபோம். நரம்பின்மேல் இத்தயிலத்தை பூசித்தேய்க்க நரம்புகளில் தங்கியிருக்கும் துர்நீர்களும், நரம்புகளுக்கும் நீங்கும். நோயுள்ள இடங்களில் பூசி, நரம்புகளிலுள்ள இரத்தத்தில் தாக்கும்படி சற்று உஷ்ணம் ஜனிக்கும் வரையில் மெதுவாய் தேய்த்தால், அடிக்கடி குளிர்ந்த நீரில் ஸ்நானஞ் செய்தல், மழையில் அதிகமாய் நனைதல், இவை முதலிய சீதளங்களால் சிரசில் ஏறி தங்கியிருந்து மற்றோரிடத்திற்கு ஓடுவதுபோல பல இடங்களிலும் ஓடி, ஒரு



கொடிக்குள் அதிகவாதனையை உண்டாக்கி, மனதை பிரமிக்கச்செய்து, புத்தியைத் தடுமாறச் செய்யும் ஜன்னியாத முதலிய வியாதிகளை ஆச்சரியப்படும்படி உடனே நீக்கும். சீசாவில் 12 அணா.

---

12. சுகந்த தாம்பூலக்குளிகைகள்—போஜனமான பிறகு, தாம்பூலத்துடனாவது அதுவழக்கமில்லாவிடில் தனித்தாவது இந்தக்குளிகையை உட்கொண்டுவந்தால் இரத்தம் சுத்தியாகும். போஜனம் கிரமமாய் ஜீர்ணமாகும். நாடி தாதுக்கள் வலிவுபெறும். நீர்த்த இந்திரியம் கட்டிவரும். தேககாந்திபெருகும். சிற்றின்பம் பேரின்பமாகத்தோன்றும். முஷ்டிமைதுனாதிகளால் போகசக்தியிழந்தவர்க்கும், அச்சக்தியை சீக்கிரமே கைகூட்டிக்கொடுக்கும். சில ஔஷதங்களைப்போல தற்காலசுகத்தைத் தந்து பிறகு இரட்டிப்புக் கெடுதிசெய்கிற துர்குணம் இந்தக் குளிகைக்குக் கிடையாது. மேகரோகங்களையோட்டி ஏகபோகம் காட்டுவது இந்தக்குளிகையொன்றே. சீசா வில் ரூபா 1-8-0

---

13. மேகஜன்ஜாமாருதம்—இம்மருந்தைதினம் காலையில் உட்கொண்டு வந்தால் கருமேகம், வெள்மேகம், குஷ்டாரம்பம், மேகத்தடிப்பு, வயிற்றுவலி, மேகவாய்வு மேக சம்பந்தமான சொறி, சிரங்கு இவைகள் நீங்கும், மேக வியாதி யுள்ளவர்களின் சம்பந்த முதலியவைகளால், முழங்கை, முழங்கால், கைவிரலின் கணுக்கள், இவை முதலியவைகளில் காணும் நோவையும், அவயவங்களை சரியாய் நீட்ட மடக்க முடியாமல் முடக்கிக் கொள்ளும் வியாதிகளையும் குணப்படுத்தும். பூனை, எலி, முதலிய ஜந்துக்களின் பற்கடி விஷங்கள் நீங்கும். பாதத்திலுண்டாகும் ஆணி, குழிகசங்கள் நீங்கும். புட்டி யில் ரூ 1-8-0. சிறியசீசா 13 அணா.

14. ஜன்னிதாவானலம்—இந்த தயிலத்தைத் தேய்த்துக்கொண்டு தலைமுழுகிவரின் தலைநோய், ஒற்றைத்தலைநோய், முகஜன்னி, தந்தஜன்னி, புறங்கழுத்துச்சிவு, தாள் கிட்டிக்கொள்ளல், மண்டைப்புண், காதிரணம், கால் பட்டபிகிசம், மாரடைப்பு, குளிர்நடுக்கம், தும்பல், மார்சளி முதலியன குணமாகும். பனி, மழை, குளிர்ந்தகாற்று இவைகளில் அதிகமாய் அடிபட்டு தேகசுகம் தப்பினவர்களுக்குக்காணும் மண்டைநோய், தலைப்பாரம், தலைக்குத்து, முதலிய நோய்களுக்கு இத்தயிலத்தைக் கொஞ்சம் சூடாக்கி, கன்னத்திலும் தலையிலும் நன்றாய்ப்பூசி சற்றுநேரம் தேய்க்க, நோய்நீங்கி சுகமடைவார்கள்.

புட்டிவிலை ரூ 1-0-0. 2 அவுன்ஸ் சீசா 6 அணா.

---

15. பாலசுகாட்சணி—இம்மருந்தில் வேளைக்கு மூன்று அல்லது நான்குதுளி உள்ளுக்குக் கொடுத்துவர குழந்தைகளுக்குண்டாகும் சீதபேதி, இரத்தபேதி, வாந்தி, மாரியிலிருந்து இரத்தம்விழுதல், தோஷம், கணம், இருமல், கக்குவான் இருமல் முதலியன நீங்கும்.

சீசா விலை 8 அணா.

---

16. பித்தஹாரி—இச்சூரணத்தை காலை மாலைகளில் சாப்பிட்டுவர, பித்த சம்பந்தமான தலைச்சுற்றல், மயக்கம், அஜீர்ணம், அரோசிகம், வாந்தி, இருமல், குலை எரிச்சல், உஷ்ணம் நீங்கும். கண்கள் குளிர்ச்சிபெறும்.

டப்பி விலை 8 அணா.

---

17. தந்தசஞ்சீவனி—இப்பொடியினால் பிரதிதினம் காலையில் பல்துலக்கிவரின் பல்குத்தல், பல் ஆட்டம், பல் கட்டிக்கொள்ளல், பல்கூச்சநோய், [illegible], பற்புழுக்கள், வாய்ப்புண், வாய் நாற்றம், [illegible] உண்டாகும் ஈர்வீக்கம், தந்தத்தில் சதை வளர்தல் இவையாவும் நீங்கும். பற்கள் காந்தியாயிருக்கும்.

டப்பி விலை 4 அணா, பெரிய டப்பி 8 அணா.



18. [illegible]—இந்த பரிமள தயிலத்தை சிரசில் தேய்த்து முழுகிவர இரத்தக்கொதிப்பு, உஷ்ணக்கொதிப்பு, நீர்க்கடுப்பு, கண்ணெரிச்சல் நீங்கும். [illegible] ல் நீர்க்கப்போன கண்களுக்கும் [illegible] கொடுத்து [illegible]. கண்ணொளி மழுக்கம் நீங்கும். தேகம் தேஜஸாகும். இலட்சுமி முதலிய தெய்வகடாட்சம் வேண்டுமவர்களும், சூரியன் முதலிய கிரகங்களின் அருட்பலன்களை சாந்திசெய்ய விரும்புவோர்களும், இதை உபயோகித்துவரலாம். வைதிகர்களுக்கு அனுகூலப்படும்.

புட்டிவிலை 12 அணா. 2 அவுன்ஸ் சீசா 6 அணா.

---

19. ஜீர்ணகாரணி—(இந்த லேகியம் வாசனையாயும் இனிமையாயுமிருக்கும்) இந்த லேகியத்தில் வேளைக்கு ஒரு சிறிய கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவந்தால் ஆகாரம் ஜீர்ணமாகும். பித்தவாய்வு, அஜீர்ணபேதி, வயிற்றுவலி, வயிறு எரிச்சல், வாந்தி, நாள்பட்ட அன்னி காசம், [illegible], ஏப்பம், [illegible], இருமல், மார்புநோய்நீங்கும். ஜீர்ணசக்தியில்லாதவர்களும், பலஹீனதேகமுடையவர்களும், போஜனமான [illegible] மணி நேரங்கழித்து இந்த லேகியத்தை உட்கொண்டுவர, சுகமடைவார்கள். டப்பிவிலை ரூபா 1-0-0.

---

20. பாலஸஞ்சீவனி—இம்மருந்தில் வேளைக்கு மூன்று அல்லது நான்கு துளி உள்ளுக்குக்கொடுத்துவர குழந்தைகளுக்கு உண்டாகும் உப்பிசம், இருமல், சுரம், காசம் நீங்கும். விலை சீசா [illegible] அணா.

---

21. வெள்ளைத்திராவகம்—இச்சூரணத்தை காலை மாலைகளில் உட்கொண்டுவந்தால், வெள்ளை என்னும் மேகநோய், நீர்தாரைக்கடுப்பு, உட்புண், மேகவெட்டை, கண்மழுக்கம், தாதுநஷ்டம் இவைகள் நீங்கும். மூத்திரம் விடுங்கால் காணும் சிக்கல், எரிச்சலும் நீங்கும். விலை டப்பி 12 அணா.

22. சொருக்கு கருக்கு வசீகம்.—இந்த வெண்ணெயை ஆண் பெண் குறிகளிலுண்டாகும் இரணங்களுக்குத் தடவிவர இரணமும், அதன் எரிச்சலும், நாற்றமும் நீக்கிவிடும். மற்ற மேக இரணங்களும் ஆறாத புண்களும் இதன் உபயோகத்தால் ஆறிப்போகும். ஸ்திரீகளும் பயமில்லாமல் இம்மருந்தை உபயோகிக்கலாம். தேங்காய் பெண்ணெயில் சேர்த்து தீபமிட்ட இடங்களுக்கு தடவிவந்தால் சௌக்கியம் உண்டாகும். கத்திமுதலிய ஆயுதங்களால் அறுபட்ட காயங்களுக்கு உபயோகப்படுத்த அதிக சீக்கிரத்தில் குணத்தைக் கொடுக்கும். அக்கினி திராவகம் முதலிய வேகும்படியான திராவகங்களினால் சரீரத்தில் பாதை உண்டானவர்களுக்கு இந்தவெண்ணெய் ஆச்சரியப்படும்படி எரிச்சலை நீக்கி, வெந்த அவயவத்தை அந்த க்ஷணமே கல்லறிந்து கொள்ளும். [இந்த அற்புதமான வெண்ணெயை ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் முன் ஜாக்கிரதையுடன் வாங்கி வைத்திருக்கத் தகுந்தது.]

டப்பி விலை ரூபா 1-0-0.

---

23. சிசுபோஷணி — இம்மருந்தை உள்ளுக்குக் கொடுத்துவர, குழந்தைகளுக்கு பிற்காலத்தில் பலவித கோரமான நோய்களுக்கு ஆதாரமாயும், பிராணனுக்கே ஹானியைத்தரும் செவ்வாப்பு முதலிய நோய்களையும் நீக்கி, குழந்தைகளுக்கு சுகாக்கினியையும் புஷ்டியையும் கொடுக்கும். தாய் தந்தையர்களின் கர்ப்ப சம்பந்தமாக தேகங்களின் அவயவங்களில் தங்கி, அவ்வவ்வுறுப்புகளை ரோமேறு பலஹீனப் படுத்தியும், கண் செவி காக்கு முதலிய புலன்களில் தங்கி, நாட்கள் செல்லச்செல்ல உணர்ச்சியற்றுப் போகச்செய்தும், பலவித வியாதிகளுக்குக் காரணமாகநின்று அனேகரை விருத்தி செய்யும் வயாதிய மேகத்தை தேகங்களின் சரீரத்தினின்றும் ஓட்டும்.

சிறிசீசா விலை 6 அணா. பெரியசீசா விலை 11 அணா.



24. மதனாமிருதம்—இதை வேளைக்கு ஒரு நெல்லிக்காயளவு சாப்பிட்டுவர, வீர்யப்பெருக்கம் இறுகி தடிக்கும். போகத்தில் விருப்பம் உண்டாகும். சப்த தாதுக்களும் விருத்தியாகும். மூளை, இருதயகமலம், குண்டிக்காய், கால், இரைப்பை முதலிய இராஜஉறுப்புகள் வலிவுபெறும்; மேகவெப்பம் தணியும். தேகம் தழைக்கும்; அழகுமிகும்; சளி, விக்கல், இருமல், காதடைப்பு, மேகஊறல், ஆயாசம், வாயு, இவைகள் சாந்தியாகும். இரத்தசுத்தியும், தீபனமும், நல்லதொனியும் (சாரீரம்) உண்டாகும்; வாய் நாற்றம் மாறும். டப்பி விலை ரூபா 1-8-0.

---

25. தேக மனஆரோக்கியகாயகல்ப பஸ்மம்—இந்த பஸ்மம் தேகத்திற்கும், மனதிற்கும் ஆரோக்கியத்தை உண்டாக்கி பல வியாதிகளைப் போக்கும்; இது சரீரசுத்தி மனசுத்தி ஆன்மசுத்திகளை உண்டாக்கும் "காயசித்தி" ஔஷதங்களி லொன்றாகும். இது உயிர் வாழ்க்கையை விரும்ப வொட்டாது துக்கத்தையும் வேதனையையும் உண்டாக்கும் க்ஷயம் முதலிய வியாதிகளுக்கு குருமருந்தாம்; இது இராஜஉறுப்புகளின் ரோகங்களையும், நாசிமுதலிய, உள் உறுப்புகளில் காணும் சிறு துவாரங்களையும் போக்கும். இந்த பஸ்மத்தில் வேளைக்கு ஒரு குன்றிமணி அல்லது ஒரு மிளகு அளவு சாப்பிட்டுவந்தால் எலும்புகள் வலிமை பெறும். சுவாசகாசம், இருமல், சளி, க்ஷயம், நாசப்பட்ட அரையாப்பு, மேக இரணம் தீரும். சுறுசுறுப்பும் யௌவனதோற்றமும் உண்டாகும். நரை மட்டுப்படும். ஞாபகசக்தி அதிகரிக்கும், ஞானபித்தியம் முதலியன நீங்கும். தலைமுடி, தாடி முதலியவைகள் பளப்பெறும். மனத்திடம் உண்டாகும். நிலையற்றமனதை நிலைபெறச் செய்யும். சீசா விலை ரூபா 3-0-0.

26. வாந்திபேதி சம்ஹாரி—இந்த மருந்தை வாந்திபேதி கண்டிருக்கிறவர்களுக்கு, இரண்டுதடவை கொடுத்தால் வாந்தியும் பேதியும் நின்று வியாதியஸ்தர்கள் சொஸ்தமடைவார்கள். அசாத்தியக்குறிகள் கண்டிருந்தால் மூன்றும் தடவையும் பிரயோகிக்கவேண்டும். அவர்களுக்குக் காணும் கபம், மனக்களர்ச்சி, விக்கல், காதடைப்பு, வெயர்வை, சன்னி, சீதளம், கைகால் முறுக்கிக்கொள்ளல், வயிற்றுவலி, முதலியவைகள் நீங்கிவிடும். இந்தக் கொள்ளைநோய் கண்டவர்களுக்கு பித்தப்பை மூடிக்கொண்டு தேகத்தில் இரத்தம் மாறி நீராய் விடுவதினால், கருவிகள் தத்தம் தொழிலைச் செய்யாமல் ஓய்ந்துபோம். கண்கள் பஞ்சடைத்துபோம். மற்றப் புலன்களும் உணர்ச்சி யற்றுப்போம். நிலசயம் மூத்திரம் வராது. இவ்விதம் அசாத்தியக் குறிகளை நீக்கி புலன்களுக்கு உணர்ச்சியை உண்டாக்கும். மூத்திரத்தை வெளிப்படுத்தி, தீபனத்தை உண்டாக்கவல்லது இம்மருந்தே. சீசா விலை ரூபா 1 0 0.

---

27. வெள்ளை நிவர்த்திலேகம்—இந்த லேகியத்தில் வேளைக்கு ஒரு கெச்சைக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட்டுவந்தால் 'வெள்ளை' என்கிற கொடிய மேகநோய் நீங்கும். நீர்தாரையில் காணும் இரணங்கள் ஆறும். சலிக்கமுடியாத எரிச்சலும், நீர்கடுக்கும் நீங்கும். மேகவெட்டையை நீக்கி, தாதுபுஷ்டியை உண்டாக்கும். தேகம் ஆரோக்கியமாகும். டப்பி 1-க்கு விலை ரூபா 1-2-0.

---

28. கவமூலகுடாரிலேகம்— இந்த லேகியத்தில் வேளைக்கு ஒரு கெச்சைக்காய்ப்பிரமாணம் காலைமாலைகளில் சாப்பிட்டுவந்தால் உள்மூலம், வெளிமூலம், இரத்தமூலம், மூளைமூலம் முதலிய அபானநோய்கள் நிவர்த்தியாகும். க்ஷயம் சாந்தியாகும். எலும்புருக்கிநோயும் பசிமந்தமுடனீங்கும். நாடிகள் உறுதிபெறும் வீரியவிர்த்தியுண்டாகும். டப்பி 1-க்கு விலைரூபா 1-4-0.



29. வாதசண்டமாருத கிருதம்—இந்த நெய்யை நேரில்தேய்த்து முழுகிவந்தால் பாரிசவாயு, கைகால் முடக்கு, பிடிப்பு, குடைச்சல் முதலிய கீல்வாதங்களும், காக்கைவலிமுதலிய மற்றவாதரோகங்களும், முகஜன்னி, தந்தஜன்னி, ஒற்றைத்தலைநோய், முதலிய தலைவலிகளும், பின்கழுத்திசிவும், நிவர்த்தியாகும். சிலேத்தும நீரும் நீங்கும். எலிமுதலிய ஜெந்துக்களின் பற்கடியால் இரத்தம்கெட்டு விஷநீராகி பலவிதவாதங்களை உண்டாக்கும் நோய்களையும் நீக்கும்.

புட்டி விலை 14 அணா.

---

30. ஞானசாதன பஞ்சாகிருதம்—இந்த நெய்யைத் தேய்த்து தலைமுழுகிவந்தால் பித்தம் சமனமாகும். இரத்தசுத்தியாகும். மூளையும் தெளிவுபெறும், மனம் ஊக்கமுற்சாகங்களை அடையும். புத்திகூர்மையாகும் ஞாபகசக்திவிர்த்தியாகும். கபாலப்புற்று, பீநசம், மண்டைகுறப்பான், காதடைப்பு, காதுவலிசீழ்வடிதல், நேத்திரரோகங்கள், முதலியனநீங்கும். புட்டிவிலை 14 அணா

---

31. சிலேஷ்ம பீஷ்ம சோஷிணி—இச்சூரணத்தை காலை மாலைகளில் சாப்பிட்டுவர, சிலேத்தும சம்பந்தமான சீதளம், கபம், இருமல், ஆயாசப்,கக்குதல் நீரும்: காசம், பக்ஷாகாசம், க்ஷயம இவைகள் கெடுதசம சமனமாகும். சீதளத்தைப்பற்றிய தலைநோய், தலைபாரம் சரீரமுழுக்கவலித்தல், தொண்டைக்கட்டல், தொண்டையில் கெரிகட்டல் இவைகள் நீங்கும்; சீதசுரங்களை அதிசீக்கிரம் கேட்கும்; இவ்வகை சுரங்கள் வருவதற்குமுன் குறிகளாலறிந்துகொண்டு, அச்சூரணத்தை முன் ஜாக்கிரதையாய் உட்கொண்டால், அவைவரவொட்டாமல் தடுக்கும்; குளிர்ச்சலத்தில் அடிக்கடி ஸ்நானஞ்செய்வதினாலும் பலகெடுதிகளை மாற்றும். சீதளரேறுதலான ஸ்நானபானாதிகளாலுண்டாகும் காதடைப்பு, காதில் சீழ்வடிதல் நீங்கும். பனி மழைகளில்

அதிகம் அடிப்பட்டு களைத்திருக்கிறவர்களுக்கு இவ்வௌஷதம அதிக ஆரோக்கியத்தைக்கொடுக்கும்.

டப்பி 1 க்கு விலை 10 அணா.

32. மூலகுடோரமூலபஸ்மம்—இந்த பஸ்மத்தை வேளைக்கு (3) மூன்று குன்றுமணி பிரமாணம் காலைமாலைகளில் நெய்யில் மத்தித்து சாப்பிட்டு வந்தால் உள்மூலம், வெளிமூலம், இரத்தமூலம், முளைமூலம், சீழ்மூலம், முதலிய சகலமூலங்களும் நிவர்த்தியாகும். எலும்புருக்கிநோயும் பவுத்திரமும் நீங்கும். நாடிகளுக்குவன்மை வரும். தாதுபுஷ்டியும் உண்டாகும். விலை ரூபா 2-0-0.

33. க்ஷயக்ஷயலேகம்—இந்த லேகியத்தில் வேளைக்கு ஒரு நெல்லிக்காய்ப்பிரமாணம் சாப்பிட்டு வந்தால் ஈளை, இருமல், சுவாசகாசம், க்ஷயம் முதலிய சிலேத்தும வியாதிகள் நீங்கும். தேகபலமுண்டாகும். அஸ்தியைப்பற்றிய உஷ்ணம்தணியும். மூச்சுத்தமொற்றம் நிற்கும். சுவாசக்குழல்பலப்படும். கபத்தைப்போக்கும். பசிமந்தம் நீங்கும். ஆயாசம் தீரும். இரத்தம் அபிவிர்த்தியாகும். தேகம் வறட்சிமாறி தழைத்து ஓங்கும்.

டப்பி 1 க்கு விலை 1-0-0.

34. வாதசம்ஹாரி—இக்குளிகைகளை காலைமாலைகளில் உட்கொண்டுவர வாதசம்பந்தவியாதிகள் நிவர்த்தியாகும்; சரீரநோக்காடு, கைகால்பிடிப்பு, சரீரக்குடைச்சல், கைகால்குடைச்சல், முதலியன நீங்கும். வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, அஜீர்ணம், பித்தவாயுவு, பின்கழுத்துச்சிவு இவைகள் நீங்கும். வாதசம்பந்தமான மார்புநோய், இடுப்புவலி, வாந்தி இவைகள் நீங்கும்; முற்றின அஜீரணத்தால் உண்டாகும் குன்மம், சூலை, மகோதரம் முதலியன படிப்படியாய் சமனமாகும். ஸ்திரீகளின் இரத்தக்கோளை நீக்கி உடம்பை பலஹீனப்படுத்தி, இளைக்கவோ அல்லது ஊதவோசெய்து, போகத்



திற்கு அனர்ஹராக்கி, அகாலமரணத்தையோ அல்லது சந்தானசூன்யத்தையோ உண்டாக்கும், கொடிய கடுரோகங்களை கிரமேணகுணப்படுத்தி சுகத்தைத்தரும்.

சீசா விலை 1-0-0.

35. புருஷத்வ புநர்த்வ ரஜிதபஸ்மம்—இந்த வெள்ளி பஸ்மத்தை வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு குன்றுமணியெடை உட்கொண்டுவர மூளை, இருதயகமலம், குண்டிக்காய், ஈரல், முதலிய இராஜ உறுப்புகளுக்கும் நாடிகளுக்கும் வலிமையேற்றி, பசிதீபனம், தேகதாருட்டியம், சுக்கிலஸ்தம்பனம், தாதுபுஷ்டி, புருஷத்துவம், ஞாபகசக்தி, மனோற்சாகம் முதலியன உண்டாகும். மனக்கலக்கம் நீங்கும். தீர்க்க இந்திரியங்கட்டும். புலன்களின் உணர்ச்சி கூர்மையாகும்; வாய்நாற்றம், ஜலதோஷம், கபம், இருமல், பீநஸம் முதலியவை வரவர மாயமாய் மறைந்து போம். விலை ரூபா 2.

36. சிசுபாலினிகிருதம்—பிழைப்பதே அரிதென்று நினைக்கும்படி, அவ்வளவு தேய்ந்து துர்ப்பலப்பட்ட குழந்தைகளுக்கு, இந்த நெய்யில் வேளைக்கு ஒரு கரண்டி விகிதம் கொடுத்துவர, தேகவலிவும், புஷ்டியும் தேஜசும் வரவர விர்த்தியாகும். தாய்தந்தையர்களின் கர்ப்பசயபந்தமான கொடிய மேகவியாதிகளும் தீரும். தேகக்கண அழற்சியைத்தணிக்கும். கரப்பான், சொறி, சிரங்கு, இரணம், இவைகள் குணப்படும். குருத்தெலும்புகள் வலிமைப்பெறும். தாயின் முலைப்பாலினும் அதிகமாய் குழந்தையைப் போஷிக்கும். இப்பரமௌஷதம் குழந்தை குட்டிகளுடைய பிரதி குடும்பத்திலும் அதியாவசியகமாய் இருக்க வேண்டிய தொன்றாம்.

புட்டி 1 க்கு விலை ரூபா 1-0-0.

37. மேகபஞ்சனித்தயிலம்—இந்தத் தயிலத்தை வேளைக்கு ஒருகாசு எடை உட்கொண்டுவந்தால் தேக

தி, சிரங்கு, தேமல், படர்தாமரை நீங்கும். மேகத்தடிப்பு முதலிய மேகரோகங்கள், வண்கிரந்தி, விஷக்கடிகள் தீரும்; கபம், சிலேஷ்மவாதம் போய்விடும்; கருமேகம், வயிற்றிலுண்டாகும் காய்ச்சல்கட்டி, குன்மவியாதிகள் மகோதரம், வெண்மேகம், ஆரம்பகுஷ்டம் முதலிய பலவித கொடியவியாதிகள் நிவர்த்தியாகும். சீசா விலை ரூபா 1-0-0.

---

38. மேகராஜ்ஞ பஞ்சாமிருதம்—(ஒன்றைத்தொடுக்கக் கொடுக்க அதிகரிக்கும் மேகவியாதியுடையவர்களுக்கு இந்தக்கிருதம் மிகவாமிருதமாகும்.) இந்த நெய்யை மேலேக்கு ஒருதாக எடை உட்கொண்டால், இரத்தத்தின் வெப்பத்தணியும், ஆறாத ஈரலின் அழற்சியும் புண்களும் ஆறும்; அதிக வெப்பத்தாலுண்டாகும் இருமல், நீர்க்கடுப்பு இவைகள் வாங்கிவிடும்; கண் எரிச்சல் நீங்கி, குளிர்ந்திருக்கும். பால் ஊட்டும்மாதர்ஸ்திரிகளுக்கு மார்பிலுண்டாகும் விப்புருதி முதலிய கட்டிகள், புண், புரைகள், சிரங்கு, மூலக்கடுப்பு, உதிரக்கட்டி, கிரந்தி, அரையாப்புக்கட்டி, கண்டமாலை, கபாலக்கொதிப்பு, வாதபிடிப்புகள், மர்மஸ்தானம் நாபி அஜணை முதலிய இடங்களிலுண்டாகும் கள்பட்ட இரணங்களும், அரிக்கவும் தீரும். மேகசம்பந்த சூக்கவாய்வு, மேகநீர்த்தடிப்பு முதலானவை நீங்கும்; நீங்கிதேகத்தில் நல்ல தேஜஸ், மனதில் மகிழ்ச்சியுங் குடிகொள்ளும். சீசா 1 க்கு விலை 12 அணா.

---

39. கவுமூலாக்னிசூரணம்—இந்தச்சூரணத்தை காலை மாலைகளில் உட்கொண்டுவந்தால உள்மூலம், வெளிமூலம், முளைமூலம், சீழ்மூலம், இவை முதலிய அபானரோகங்கள் நீங்கி சரீரம் தழைக்கும். மூலஉதிரப்போக்கும் நிற்கும். அசனத்தினை அடக்கும்; கபம் தீரும்; ஷௌத்திரம், இருதயத்துடிப்பு, குன்மம், எலும்புருக்கி,

LB 1795



14

இவைகள் சீக்கிரமேகண்டிக்கப்படும். அயர்வு, காலசந்தி, குதிக்காலைப்பற்றியவாயு, நெஞ்செரிவு, வயிறூதல், வயிற்றுக்குத்தல், சூலைவலி, இடுப்புவலி, விலாகுத்தல், அஜீரணம், புளியேப்பம், இவைநீங்கும். தீபனமுண்டாகும்; இளைப்பை வல்லமைபெறும்; உதிரத்திலுள்ள மாசுநீங்கி சுத்தப்படும்; தன்மேனியும் மாசடையாது காக்கப்படும். டப்பி விலை ரூபா 1.

114363

40. மலகிர்மலி—இச்சூரணத்தை காலைமாலைகளில் உட்கொண்டால், வாத பித்தாதிக்கத்தினால் மலம் நீங்கப் கழிபடாமல் ஆமிலமாய் மேல்சேர்ந்து, கபால முதலிய உறுப்புகளிற்கும், பொதுவாய் சரீரத்திற்கும் பலவித கெடுதிகளைச் செய்வதாகிய "மலபந்தவியாதி" தீர்ந்து, மலம் தாராளமாய்ச் செல்லும், மலச்சிக்கலால் பல்லிப்பெருகும், புழுக்கட்டிகள் மாய்ந்துபோம்; நரம்புகளில் தங்கியிருக்கும் வாதபித்த தாதுக்கள் வெளிப்படும்; இரத்தம் பரிசுத்தமாகும்; மலக்குடலிலுண்டாகும் புண்கள் ஆறும்; வேயர்வைநாற்றம் நீங்கும்; வாயுவு கண்டிக்கப்படும்; உள்உறுப்புகளின் தடிப்பும் சூடும் நீங்கும்; மூத்திரமும், வேயர்வையும் தாராளமாய் வெளிகாணும்; காலில்மரப்பாதல், அஜீரணம், காலில் அட்சரம், வாய்நாற்றம், நாவறட்சி, புளியேப்பம், விக்கல், மயக்கம், குமட்டல், வாந்தி, மூளைச்சூடு, கண்புகைச்சல், இடுப்புவலி, மார்புவலி, வயிற்றுவலி, வயிற்றுக்கடுப்பு, இருமல், காமாலை, வீரியநஷ்டம் இவைகள் நீங்கும்; பாலூட்டும் தாய்மார்கள் இச்சூரணத்தைச் சாப்பிட்டுவரச் சேர்க்கத்தில் உள்ள அருவ தோஷங்களும் நீங்கி, பாலபுஷ்டியடைவார்கள். கண்குளிர்ச்சி, தீபனம், சுறுசுறுப்பு உண்டாகும்; இளைப்பைக்கு வலிமையுண்டாகும்.

டப்பி விலை ரூபா 1.

---

41. திரிதோஷப்பிரமேக வைத்தியநெய்— இந்த எண்ணெயை உட்கொண்டால் அஜீரணமான

சகபேதியாகும்; வயிற்றில் தங்கிய பழமலங்களை வெளிப்படுத்தும். இந்த லேகியம், இரத்தத்தில் வியாபித்து பலவித கெட்டவியாதிகளுக்கு ஆஸ்பதமாயுள்ள சாதுமித்து, சிலேட்டும ஆரீர்களை மலத்தோடு கழித்துவிடும்—சொறி, சிரங்கு, கருப்பான், புண், புரை இவைகளைப் பற்றப் போக்கிவிடும்; ஆஸ்திகாரம், கணசுவாசம், அஜீரணம் இவைகளை குணப்படுத்தும். வயிற்றிலும், குடலிலும் இருக்கும் கிருமிகளை வெளிப்படுத்தும். ஸ்திரீகளுக்கு அடிக்கடி உண்டாகும் ருதுசம்பந்த ரோகங்களை நீக்கும். சூதகச் சந்தி வலி முதலிய அவயவங்களில் காணும் வீக்கத்தையும், முடக்கல்களையும் போக்கும். தேகத்தை வெளிப்படுத்தி, இரத்தத்தை சுத்திகரித்து, பலவித மேக வியாதிகளைச் சாந்திப்படுத்தும். மூலவியாதிகளையும் அகற்றும். ஸ்திரீ, புருஷர் மர்மஸ்தானங்களி லுண்டாகும் பலவித மேகரணங்களையும், கண்டமாலையையும் சாந்திப்படுத்தும்.

இரண்டு அவுன்சு சீசா விலை ரூபா 1 0 0.
ஒரு அவுன்சு சீசா விலை 0 8 0.

---

42. சர்வமேக சண்டமாருதலேகியம்—இந்த லேகியத்தை வேளைக்கு ஒரு சிறிய கொட்டைப்பாக்கு பிரமாணம் உட்கொண்டுவந்தால், நானாவித மேகவியாதிகளையும், மேகரணங்களையும் போக்கும்; குன்மம், பவுத்திரங்கள், பாண்டு, சோகை, க்ஷயம், காமாலை, குடல்பிரட்டல், கிரந்தி, புரையோடும் மேகப்புண்கள், அன்னஞ் செரியாமை, ஸ்திரீகளுக்குக் காணும் மேகசம்பந்த ருதுகவியாதிகள், மேகநீர்கள் தங்கி கைகால்கள் முடங்கிக் கொள்ளல் இவைகள் நீங்கும்; வெண்குஷ்டம் முதலிய குஷ்டங்கள் சாந்திபெறும்; கைகால்களி லுண்டாகும் கரும்புள்ளிகள் நிறம் நிறமாய் குணமடையும்;

மேலும் வாத, பித்த, சிலேஷ்மாதிகளுடன் தொந்தப்பட்ட மேகரோகிகளுக்குக் காணும் சரீரக்கடுப்பு,





குத்தல், ஊறல், திருகிகள், மேகக்கட்டி, உள்ளங்காலிலும் உச்சியிலும் காணும் குத்தல் குடைச்சல், கருப்பான், சொறி, மேகப்புண், அராமாதிசவனாச்சி, குரல் கம்மல், இவைநீங்கும்; காது, மூக்கு, வாய், தொண்டை இவைகளில் காணும் மேகரோகங்கள், மாதாக்குப்பாசய ரக்ததோஷங்கள், இவைமுதலிய துர்கந்த விஷங்கள் இவை நீங்கும்; தேகத்தில் காணும் வீக்கம் இறங்கும்; நீரோற்றம் குறையும்; ஆயாசமடையாமல், மனப்பிரமை நீங்கும்; தேகதாதுவிருத்தியுண்டாகும்.

டப்பி விலை ரூபா 2. சிறியடப்பி விலை ரூபா 1-4-0.

---

43. தேகபோஷணை இரத்த சம்பூர்த்தி லேகியம்.—இந்தலேகியத்தை வேளைக்கு ஒரு கொட்டைப்பாக்கு பிரமாணம் உட்கொண்டுவந்தால், இரத்தம் சுத்தியும் விருத்தியும்பெறும்; தேகத்தில் வலியும் திடமும் அழகும் உண்டாகும். வறண்டு மெலிந்த சரீரம் தழைக்கும். தாது புஷ்டியாகும். சில தேகத்திற் பெலவீனமாகிய ஆர்காற்றங்கள் நீங்கிவிடும். ஸ்திரீபுருஷ போகத்தினால் களைப்புற்று மெலிவுற்ற தேகமும், மேனிக்கால் தழைத்தோங்கும். காமப்புகள் உறுதிப்பட்டு தேகம் இறுகும். இப்புரோயிருந்தால் அது நீங்கிப்போகும். விருத்தாப்பியர்களுக்கு பலஹீனதாதுக்கள் பலமாய் உண்டாகும். குளிர் நடுக்க முதலியன நீங்கும். ஸ்திரீகளுக்கு பிரசவத்தாலோ, அல்லது கர்ப்பமசுத்தாலோ, வெளிக்கண்டுருக்கும் கருப்பக்குழை இவைகள் மேமருந்தால் உள்ளடங்கும். மூளை சுரல் இவைட்டை முதலிய உள் உறுப்புகள் வலிவுபெறும். எலும்புகள் உறுதிபெறும். கண் தெளிவடையும். பால் வற்றிய ஸ்திரீகளுக்கு பால் சுரக்கும். இரத்தம் வறண்டு உடல் மெலிந்து போனவர்கள் இரத்த நாளங்கள் புஷ்டியாய் தேகம் பருமனாகி தழைத்து, ஆரோக்கியமும் பலமும் உண்டாகும்.

டப்பி விலை ரூபா 1—12—0.

44. ஸ்நாந சௌகந்திகம்,—இந்த ஸுகந்தப் பொடியை பிரதிதினம் ஸ்திரீ புருஷர் சரீரத்தில் பூசி குளித்து வர சரீரத்திற்கும் மனத்திற்கும் ஆரோக்கியம் உண்டாகும். சரீரத்தில் காணும் வெயர்வைச் சம்பந்தமான துர்க்கந்தங்கள் நீங்கி, மனோஹரமான மணம் வீசும். இரத்தத்தில் தங்கிய துஷ்டநீர்கள் பிரிந்துபோம். சரீர சித்தாங்களும் சமரசப்படும். படலித்த சொறி சிரங்கு தினவு தேமல் படை படர்தாமரை முதலிய சர்மரோகங்கள் சீக்கிரமே விலகிப்போம். தொற்று வியாதியான, அம்மை என்னும் வைசூரி முதலானவை தாக்கா. அநேகர் தாக்கினும் இலேசாய் நிவாரணமாகும். முகவசீகரமும் தேகலாவண்யமும் உண்டாகும். மேகவெப்பம் தணியும். உடம்பெரிச்சல் நீங்கும். கட்டிய இரத்தம் கரையும். விருத்த ஜப உபாசனை [illegible]களுக்கும், சூரியாதி நவக்கிரஹ சாந்தியை விரும்புபவர்களுக்கும், இது மெத்த உசிதமானது. கருப்பிணிகள் இதைப் பூசி ஸ்நானஞ்செய்து வருவார்களாகில், பிரசவம் சுகப்பிரசவமாகவிருக்கும். குழந்தைகளுக்கு இதை உபயோகித்துவர விஷ ஜந்துக்கள் கிட்டா. அழுவயிறு தொடைச்சந்து முதலிய இடங்களில் இதைப் பூசி தேய்த்துவர, இந்திரியக்குழல் நரம்புகளும் உறுப்புகளும் பலம்பெறும். முகத்தை விகாரப்படுத்தும் வெயர்வைக்கட்டி பரு வடு முதலியவைகள் நீங்கும். மன உற்சாகம் உண்டாகும். இது இல்லற வாழ்க்கையாளருக்கு அத்தியாவசியகமானது.

சிறியடப்பி விலை 6-அணா.
பெரியடப்பி விலை 12-அணா.

---

45. காடிதாருட்டிய மதனானந்த லேகம்,—இந்த லேகியத்தை வேளைக்கு ஒரு கெச்சைக்காய் விகிதம் உட்கொண்டு வந்தால், வாத பித்த சிலேட்டும நாடிகளில் பாய்ந்துள்ள சர்வதோஷங்கள் பிரிந்து இரத்தம் சுத்தியாய், அக்காடிகளை ஆதாரமாகக்கொண்ட சரீரமும் மன



மும் ஆரோக்கியம் அடையும். இளமைப் பருவத்தில் அறியாமையால் தேகத்தை அதிக அகால போகத்தால் கெடுத்துக் கொண்டவர்களுக்கு இந்த லேகியம் மஹோபகாரியாயிருக்கும். ஐம்புலன்களின் உணர்ச்சி கூர்மை பெறும், நாடி நரம்புகள் வலிவுபெறும். வீர்ய[illegible]த்தியம் கட்டும். சிற்றின்பம் பேரின்பமாகத் தோன்றும். மூலாதாரத்திலுள்ள போதசக்தி இழுக்கவரும் அச்சக்தியை கிரமேண கட்டிபெறுவர். சில ஞானத்தவசிகள் போல கற்காலம் அகத்து தேறி இரேட்டுப் படக் கெடுகிற குற்றமும் இந்த லேகியத்தினிடம் கிடையாது. எலும்புகள் வலிவுபெறும். தேகம் திடப்பட்டு அழகும் யௌவன தோற்றமும் பெறும். ஞாபகசக்தி விர்த்தியாகும். மனம் ஊக்க உற்சாகங்களை அடையும். தேகம் இறுகி நரம்புகள் வலிமைபெறும். அக்கினிவேற்பத்தி உறுப்புகளிலும் கவிந்தியம் வெளிப்படும் உறுப்புகளிலுள்ள சீர்கேடுகளையும், அற்பலத்தையும் போக்கி, சாதாரண உற்பத்திக்கு ஏற்றபடி போஷிக்கும். டப்பி விலை ரூபா 1-12-0.

---

46. சர்வப் பிரமேக கர்ப விமோசனிகச் சூரணம். இச்சூரணத்தை காலை மாலைகளில் உட்கொண்டு வந்தால் இரத்தத்தை சுத்திகரித்து விருத்திசெய்யும். வாத பித்த சிலேட்டும தோஷங்கள் குறைந்துபோம். பிரமியங்கள் பிரமேகங்கள் என்னும் வெள்ளை, மேக ரோகங்களும், குஷ்டியாதிகளும், க்ஷயவியாதிகளும் குணப்படும். மூத்திரப்பிரமேகம் சுக்கிலப்பிரமேகம் நாள்பட்ட வெள்ளை, (பஞ்சுநூல்போல விழுகின்ற) தந்து மேகம், மூத்திரஎரிப்பு, இவை தீரும். அதிபோகத்தினால் தேகம் மெலிந்து நைந்துபோனவர்கள், இச்சூரணத்தினால் அதிகசுகம் அடைவார்கள். நீர்தாரையில் சீழ் இரத்தம் வடிதல், புண் புரை தாபமேகங்கள் வளர்தல், முதலிய மேகரோகங்கள் நீங்கும். தேகம் இறுகி, நரம்புகளும், ஜனனேந்திரியங்களும் பலமடைதல் முதலிய இராஜ

உடைப்புகளும், கிருமிகளை உடைப்புகளும், மேகத்த விரி
லை அடையும். தாதுபுஷ்டியேற்படும். கக்ஷரோகங்கள்
நீங்கி இறுகும். தாபுளை நீங்கும். பாதரசம் சேர்த்த
மருந்துகளை உட்கொண்டதினால் உண்டாகும் கெடுதிக
ளும் விரணங்களும் அழியும். பாண்டு பிளவை நீங்கும்
அயம் காசம் அகில பெருமூச்சு வெகுமூத்திரம் மது
மூத்திரம் இவைகள் கண்டிக்கப்படும். இரத்தக் கக்கல்,
வாந்தி, மூர்ச்சை, விக்கல், கண் காது கை கால் இவைக
ளில் காணும் எரிச்சல், பித்தசிலம் இவைகளை நீக்
கும். பசி உண்டாகும். பெருவயிறு, குடல்வாதம், முட
க்குவாதம், கணைச்சூடு, காமாலை, கருப்பாண், சோகை சி
க்கு, இளைப்பு, சுழற்சுவலி, இருமல்ரோகம், ரணப்பட்ட அவ
ரத்திலுண்டாகும் ஆயாசம், விந்து கஷ்டம், மேகவெ
ட்டை, பெரும்பாடு இவைகள் தீர்ந்துபோகும். சிரசில்
தங்கியிருக்கும் கிலேஷ்மம் நீங்கிவிடும். சந்தி பாதசோ
காங்களில் காணும் வாதத்தை அடக்கிப்போக்கும். விஷக்கடிகளை
மாற்றும். மேகக் கட்டிகளைக் கரைக்கும். விக்கத்தினை
போக்கும். இரத்தி, புண், காரப்பட்ட ...
கள் முதலிய மேகரோகங்களைக் கண்டிக்கும். வெண்
குஷ்டம் கருங்குஷ்டம் படைகள் முதலிய சரும ரோ
கங்களை சாந்திப்படுத்தும். சிறிய டப்பி விலை ரூ 1-4-0.
பெரிய டப்பி ரூ 2.

---

47. இரத்த வர்த்தனி லேகியம்.—இந்த லேகியத்
தை வேளைக்கு ஒரு சிறு கொட்டைப்பாக்கு பிரமாணம்
உட்கொண்டு வந்தால், ஜீவாதாரமாகிய இரத்தம் விர்த்தி
யாகும். இரத்தம், பாசகன் நீங்கி சுத்தப்படும். இருத
யத் துடிப்பு, கை கால் உளைச்சல், தலைவலி, பொருத்து
ரம், இவைகள் கண்டிக்கப்படும். புத்தி போதி மனம்
இவை தெளிவடையும். அதிக வுஷ்ணத்தால் குடல்க
ளில் காணும் அழற்சி புண்கள் ஆறும். அஜீரணம் நீங்
கும். அஜீரணபேதி இரத்தபேதி இவைகளை கட்டும்.
காமாலை தீர்த்தியாகும். இளைப்பு சாரீரிகமை வலி



றுக்கும். இந்த லேகியத்தால் இரத்த அணுக்கள் பெ
ருகி, அதனிடம் பிசுவும் நிலைக்கும். இரத்தக் குறைவா
லே கெட்ட இரத்தத்தாலே வெளிர்த்துக் காணும்
மேனி, உதடு, கன்னம், கண், கை இவைகள் சுகந்தி
அடையும். பசி விருத்தியாகும். சரீர அற்பலம் நீங்
கும். சக்திலைகுறைவு நீங்கும். விலை டப்பி ரூ 1-4-0.

---

48. விருத்த வாலிப விருத்தி லேகியம்.—இந்த லேகியம்
முக்கியமாய் விருத்தாப்பியர்களுக்கென்றே சித்தஞ் செ
ய்யப்பட்டிருக்கிறது. தேகத் தளர்ந்து, புலன் மழுங்கி
மனத் தொய்ந்து, அடிக்கொருதரம் சோர்வு கையுமாயிரு
க்கும் முதியோர், பருவத்தவர்களுக்கு இம்மருந்தால்
சரீர வன்மை திடமும் ஆரோக்கியமும் மனதிடமும்
உண்டாகும். (வாலிபர்களும் பெண்களும் இந்த
லேகியத்தை உட்கொள்ளலாம் தவிர.) இதில் வேளை
க்கு ஒரு சிறு கொட்டைப்பாக்கு பிரமாணம் உட்கொண்
டு வந்தால் தேகம் விர்த்தியாகும். தாதுபுஷ்டி யுண்டா
கும். இருதயமும் நரம்புகளும் வலிமைப்பெறும். இடு
ப்பு குழிக்காய் இவைகள் இவைகளில் உண்டாகும் சோ
ர்வு நீங்கும். பற்கள் பலப்படும். மனம் தைரியத்தையும்
உற்சாகத்தையும் அடையும். விருத்தர்களுக்குச் சபல
புத்தி உண்டாகும் தேக மனச்சஞ்சலமான பலவித அசு
கங்கள் நீங்கும். முக்கியமாய் இதைத் துயிர் பிரியும்.
... இளைத்தல், வாய்நாற்றம் மாறும். மறதி
நீங்கும். விலை டப்பி ரூ 1-4-0.

---

49. இரத்தசுத்தி ... கல்பச்சூரணம்.—இச்சூ
ரணத்தை தினந்தோறும் மூன்று விரல் கடைப்பிரமாணம்
சாப்பிட்டு வந்தால், வாத பித்த சிலேத்தும தோஷங்கள்
ஒழிந்து சமநிலையடையும். கப உபத்திரவம் நீங்கும். போ
ஷகப்பயிர்... முதுமையின் மாசு அகலும். அல்லு
... தேகத்திலுள்ள கழிவுகளெல்லாம் இறங்கி ...
படும். இரத்தவிர்த்தி உண்டாகும். உடல் காற்றம்

மாறும். கண்ணொளி தெளிவாகும். சோம்பல் கொட்டாவி கபாலவெட்டை இவைகள் நீங்கும். தேகம் அழுத்தப்படும். விஷக்கடிகளால் கெட்ட இரத்தம் சுத்தப்படும். அப்பியாசிகளுக்கு ஐம்புலன்களின் செயல்களை நீக்கும். இல்லறத்திலிருந்து ஞானமார்க்கத்தில் மனஞ் செல்லாதவர்க்கு, இம்மருந்து மனதை ஒருவழிப்படுத்தி யோகம் வைராக்கியம் உண்டுசெய்யும். மற்றுமவர்க்கு காயமென்றும் திரிகரண தோஷங்களை போக்கி, அவற்றை பிரம்மவித்தையத்தில் ஈடுபடுத்தும். பிரமசர்யாதி காலவகை அப்பியாசிகளுக்கு இது அதிக பிரயோஜனகரமாம். விலை டப்பி ரூ 1-4-0.

---

50. ஜீர்ணவிருத்தி மேகஹரா தாம்பூலக் குளிகைகள். இக்குளிகைகளை தாம்பூலத்துடனாவது தனித்தாவது உட்கொண்டுவந்தால், மேகநீரைப் போக்கும். மேக வியாதியினைச் சாந்தப்படுத்தும். அஜீரணம், அஜீரணபேதி, வயிற்றுவலி, வாந்தி, இருமல், மார்புநோய், விக்கல், இரைப்பையிலுள்ள பிரமேகங்கள் இவைகளை நீக்கும். பல் சந்து, பல்லில் கூசுதல் முதலிய தந்த வியாதிகள் நீங்கும். அன்னம் செரியாமை, சந்தி சம்பந்தத்தாலுண்டாகும் சீதளம், கபப்பாரம், தலைவலி முதலிய வியாதிகள் போம். வாசகக்குழலில் தங்கியுள்ள அசுத்தத்தைப் போக்கி சுத்தமாக்கிக் கொடுக்கும். நாவில்படரும் மாவை நீக்கும். அக்கினி விளங்கும். ஆயாசத்தையும் பலஹீனத்தையும் நீக்கி நரம்புகளுக்கு வலிமையைக் கொடுக்கும். கெட்ட வாசனைகளைப் போக்கி இரத்தத்தை சுத்திசெய்யும். முகத்தை விகாரப்படுத்தும் முகப்பருமுதலியவைகளைப் போக்கி முகத்திற்கு அழகும் வசீகரமும் கொடுக்கும். தேகம் காந்தி பெறும். சீசா விலை ரூபா 1-0-0.



உபயோகிக்கும் முறைகள் மருந்துகளோடு அனுப்பப்படும்.

வெளியூரார் தங்கள் மேல்விலாசத்தை பூர்த்தியாயும், தெளிவாயும் எழுதவேண்டியது.

பதில்வேண்டுவோர் ரிப்ளைகார்ட்டாவது தபால்முத்திரையாவது அனுப்பவேண்டும்.

☞ வேண்டியவர்கள் முன்பணம் அனுப்பியாவது, பின்னால் பணம் அனுப்பும் வாலியூபேயபில் தபால்மூலமாயாவது, சென்னை தங்கசாலைவீதி கிழக்கண்டைவாடையில் 259-வது நெம்பருள்ள கிருகத்தில் ஸ்தாபித்திருக்கும், விக்டோரியா ஜூபிலி சித்தௌஷதசாலை மானேஜரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

---

குறிப்பு—தபால்மூலமாயல்லாமல், ரெயில்வே பார்சலாய் மருந்துகளை பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள், தங்கள் இருப்பிடத்திற்கு சமீபமாயும், தாங்கள் அல்லது தங்கள் உத்திரவுபெற்றவர்கள் சென்று சாமான்களை பெற்றுக்கொள்ளக் கூடியதுமாயுமிருக்கிற ரெயில்வே ஸ்டேஷனையும் தங்கள் மேல்விலாசத்தையும் விபரமாய் தெரிவிக்கவேண்டியது.

---

*Registered Copy Right*

*Revised & Enlarged.*

**SECOND EDITION 1000 COPIES.**

## புத்தகங்கள்.

1. விக்டோரியஜூபிலி மெஞ்ஞான போதினி, என்னும் வி. ஜூ. மஹோத்சவ புத்தகம் விலை 3-அணா.

2. மூதறி விக்கினம்.— (இது கர்மரோக உற்பத்தி நிவர்த்திகளையும் தர்மா தர்மங்களையும் விளக்கும்) விலை 2 அணா.

[இப்புத்தகம், கர்மம் இத்தன்மையதென்றும், அபாநுஷ்கம் இவையென்றும், அதர்மிகளாகிய கர்மிகள் இவர்களென்றும், சரீரம், மனம்; ஆன்மாக்கள் சுத்திபெற, பல சத்கர்மங்கள் புரிய வேண்டுமென்றும், இன்னின்ன கர்மங்களைச் செய்வதினால் இன்ன இன்ன கன்மரோகங்கள் ஜெனிக்கிறதென்றும், இன்ன சத்கர்மங்கள் செய்வதினால் அவைகள் நிவர்த்தியாகுமென்றும், தாவரங்களின் (மூலிகைகளின்) அற்புதங்களையும், தர்மாதர்ம விளக்கத்தையும், மருந்து முறிவுச்சுருக்கத்தையும் கூறுகின்றது.]

புத்தகங்களுக்கு தபால்கூலி பிரத்தியேகம் 6 பை.

☞ புத்தகங்கள் வேண்டுவோர் சென்னை, தங்கசாலை வீதி கிழண்டையார் கேட் 359-வது நெம்பர் இருக்கின்ற விக்டோரியா ஜூபிலி சித்தௌஷதசாலை மானேஜருக்கு தபால் முத்திரைகள் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

# THE AYURVEDA KALPAGAM.

## "ஆயுர்வேத கல்பகம்."

இப்பெயர் பூண்ட மாதாந்தப் பத்திரிகையொன்று சென்னை "விக்டோரியா ஜூபிலி சித்தௌஷதசாலை" யினின்றும் 250 கையொப்பக்காரர்கள் சேர்ந்தவுடனே மாதமிருமுறை பிரசுரமாகும்.

இதில் முக்கியமாய் வைத்திய விஷயங்களும், சுகாதாரத்தைப்பற்றிய அநேக முறைகளும், பிரஜாபாலனத்தைப்பற்றிய இன்றியமையாத விஷயங்களும், பலதேச சமாசாரங்களும், பொது விஷயங்களும், யாதுஷீக கர்மங்களும், சரீரம், மனம், ஆன்மா இவைகளை சம்பந்தித்தால் மனிதர்கள் அடையக்கூடிய நன்மை தீமைகளும், இன்னும் பல அரிய விஷயங்களும் சமயோசிதமாய்ப் பல கல்விமான்களால் எழுதிவரப்படும்.

[illegible] ~~[illegible]~~ மாதத்தில் இப்பத்திரிகையை ஆரம்பிக்க உத்தேசமாதலால், கல்வி அபிவிருத்தியில் விருப்பமுடைய கனவான்கள் கூடிய சீக்கிரத்தில் கையொப்பக்காரர்களாகச்சேர்ந்து, எமது நன்முயற்சியை ஆதரிப்பார்களென்று நம்புகின்றனம்.

| | | | |
|---|---|---|---|
| வருஷ கையொப்பம் வெளியூர், உள்ளூர்காரர்களுக்குத் தபால்கூலி உள்பட ரூபா. | 1 | 0 | 0 |
| பினாங், சிங்கப்பூர்களுக்கு ... ... | 2 | 2 | 0 |

☞ கையொப்பத் தொகையைச் சென்னை, தங்கசாலை வீதி கிழண்டை வாசலில் 359-வது நெம்பர் "விக்டோரியா ஜூபிலி சித்தௌஷதசாலை" மானேஜருக்கு அனுப்பி ரசீது பெற்றுக்கொள்ளவும்.

✓9

# The Victoria Jubilee Hindu Medicines.

விக்டோரியா ஜூபிலி இந்து ஔஷதங்கள்.

## விளம்பரம்.

இந்த ஔஷதங்களை உட்கொண்டு குணமடைந்தவர்கள், இத்துடன் மௌனமாயிராது, இவ்வௌஷதங்களால் அவர்கள் அடைந்த குணத்தின் அநுபவத்தை யதார்த்தமாய் உள்ளது உள்ளபடிக்கு ஓர் நற்சாட்சிபத்திரமாக (Certificate) எழுதி, "விக்டோரியா ஜூபிலி சித்தௌஷதசாலை" மானேஜருக்கு அனுப்பும்படி வந்தனத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.—ஏனெனில், இப்படி குணமடைந்தவர்கள் எங்களிடத்தில் நன்றியுள்ளவர்களாய் யதார்த்தமாய் எழுதியனுப்பும் நற்சாட்சிபத்திரங்களை அச்சிட்டு விளம்பரப்படுத்துவதால், வியாதியால் கஷ்டப்படும் மற்றவர்களையும் இவ்வௌஷதங்களை வரவழைக்கச்செய்து, உட்கொண்டு, குணமடைந்து, சுகமடையும்படி செய்யச் சற்றுத் தூண்டுதல் செய்யும் பரோபகாரமாயிருக்கும்.

114363

☞ இந்த ஔஷதங்கள் வேண்டியவர்கள்; சென்னை தங்கசாலைத்தெரு கீழண்டை வாடை 359 வது கதவிலக்கமுள்ள கிருகத்தில் ஸ்தாபித்திருக்கும் "விக்டோரியா ஜூபிலி சித்தௌஷதசாலை" மானேஜருக்கு முன்பணமனுப்பியாவது, வாலியுபேயபில் தபால்மூலமாயாவது பெற்றுக்கொள்ளலாம்.

---

குறிப்பு—தபால்மூலமாயல்லாமல் ரெயில்வேமார்க்கமாய் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள், தங்கள் இருப்பிடத்திற்குச் சமீபமாயும் தாங்கள் சென்று சாமான்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதுமாயுமிருக்கிற ரெயில்வே ஸ்டேஷனையும் தங்கள் மேல்விலாசத்தையும் விபரமாய்த் தெரிவிக்கவேண்டியது.

வெளியூரார் தங்கள் மேல்விலாசத்தைப் பூர்த்தியாயும், தெளிவாயும் எழுதவேண்டியது.

பதில்வேண்டுவோர் ரிப்ளைகார்ட்டாவது தபால் முத்திரையாவது அனுப்பவேண்டும்.

---

Tamil Second Edition 1000 Copies,

1417